இந்திய வானிலைத் துறை & தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலை கழகம்

# வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், கோவை

# மண்டல வாரியான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை - 07.10.2015

### மாநிலத்தின் கடந்த வார வானிலை

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 29°செ முதல் 37°செ ஆகவும், இரவு நேர வெப்பநிலை 21°செ முதல் 27°செஆகவும் பதிவானது. கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 18°செ முதல் 21°செஆகவும், இரவு நேர வெப்பநிலை 10°செ முதல் 13°செ ஆகவும் பதிவானது. தமிழ் நாட்டில் பல இடங்களில் இலேசானது முதல் மிதமான மழை பெறப்பட்டது..

### வானிலை முன்னறிவிப்பு மற்றும் அறிவுரைகள் (07.10.2015 முதல் 11.10.2015)

### 1. மேற்கு மண்டலம்

மேற்கு மாவட்டங்களான கோயமுத்தூரில் வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மிதமானது முதல் கன மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை் 30°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 22°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 78-81 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 78-80 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 13 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் தெற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரை**

- ✓ கோயமுத்தூர் மாவட்டத்திலுள்ள பொள்ளாச்சி பகுதியில் தொடர்ந்து மழை எதிர்பார்க்கப்படுவதால் நிலக்கடலை பயிரை அறுவடைசெய்து உலர் கருவி மூலம் காய வைக்கவும்.
- ✓ மழை எதிர்பார்க்கப்படுவதால் ஜூலை மாதம் நடவு செய்யப்பட்ட இறவை மரவள்ளிக்கு மேலுரமாக எக்டருக்கு 45 கிலோ தழை சத்து மற்றும் 120 கிலோ சாம்பல் சத்து இட்டு மண் அணைக்கவும்.
- ✓ மழை எதிர்பார்க்கப்படுவதால், மானாவாரி நிலங்களில் பயறு வகைகள், மக்காச்சோளம் மற்றும் சோளம் விதைக்கவும். விதைப்பு முடிந்த இடங்களில் பாடுவாசி விதைக்கவும்.
- ✓ இறவையில் விதைக்கப்பட்ட பச்சைப்பயறு மற்றும் உளுந்து பயிர்களில் மண்ணிலுள்ள அதிக ஈரத்தன்மையால் கொடிகள் வர வாய்ப்புள்ளது. ஆகவே கொடிகளை கிள்ளி விடவும்.
- ✓ வரும் நாட்களில் மழை எதிர்பார்க்கப்படுவதால், இறவையில் பயிரிடப்பட்ட குளிர் கால கம்போடியா பருத்திக்கும் மற்றும் மஞ்சள் பயிருக்கும் வடிகால் வசதி செய்யவும்.

### 2. காவிரி டெல்டா மண்டலம்

காவேரி பாசன பகுதிக்கு உட்பட்ட மாவட்டங்களான தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், கரூர், பெரம்பலூர், அரியலூர் மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 33°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23°செ முதல் 26°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 72 முதல் 82 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 4 கி.மீ முதல் 15 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ அடுத்த ஐந்து நாட்களுக்கு லேசான மழை எதிர்பார்க்கப்படுவதால் அறுவடை நிலையில் உள்ள குறுவை நெல்லினை தாக்க பாதுகாப்புடன் அறுவடை செய்யவும்.
- ✓ சம்பா பருவத்தில் நேரடி விதைப்பில் விதைப்பதற்கு முன் விதைகளை சூடோமோனாஸ் என்ற எதிர் உயிரியினை ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் என்ற அளவில் விதை நேர்த்தி செய்து விதைக்கவும். இதனால் விதைகளின் முளைப்புத்திறன் மற்றும் வீரிய தன்மை அதிகரிக்கும். விதைகள் மூலம் பரவக்கூடிய நோய் கிருமிகள் அழிந்து விடும்.
- ✓ சம்பா நெல் நாற்றாங்காலில் இலைசிலந்தியின் தாக்குதல் பரவலாக தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு டைக்கோபால் 500 மி.லி அல்லது நனையும் கந்தகத்தூள் 400 கிராம் என்ற அளவில் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.

### 3. தெற்கு மண்டலம் - 1

தெற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான திருநெல்வேலி, விருதுநகர் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் வானம் அதிகமான மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 31°செ முதல் 34°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 25°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 60 முதல் 86 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 2 கி.மீ முதல் 14 கி.மீ வேகத்திலும் வீசும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ மானாவாரியில் சாகுபடி செய்வதற்கு பயிர் சாகுபடி பருவத்தில் ஏற்படும் வறட்சியை தாங்கி பூச்சி மற்றும் நோய்த்தாக்குதலை எதிர்த்து வளரும் இரகங்களை தெரிவு செய்யவும். பருத்தியில் KC 3, மற்றும் PA 255, மக்காச்சோளத்தில் CoH(M) 6, சோளத்தில் K 8 மற்றும் K 12, பாசிப்பயிரில் CO 6, ஆகிய இரகங்கள் மானாவாரிக்கு உகந்தவை.
- ✓ மானாவாரியில் விதைப்பு செய்வதற்கு ஒரு எக்டருக்கு சோளத்திற்கு 15 கிலோ, மக்காச்சோளத்திற்கு 20 கிலோ, பாசிப்பயறு மற்றும் உளுந்துக்கு 20 கிலோ மற்றும் பருத்திக்கு 15 கிலோ என்ற அளவில் விதைகளை பயன்படுத்தவும்.
- ✓ மானாவாரியில் விதைப்பு செய்யப்படும் விதைகளின் முளைப்புத்திறனை மேம்படுத்த விதைகளை கடினப்படுத்தி விதைக்கவும். சோளவிதைகளை 2 சத பொட்டாசியம் டை ஹைட்ரஜன் பாஸ்பேட் கரைசலில் 6 மணி நேரம் ஊறவைத்து பின்பு முன்பு இருந்த ஈரப்பதத்திற்கு நிழலில் உலர்த்தி விதைக்கவும். ஊறவைப்பதற்கு விதைகளின் கொள்ளளவிற்கு சரிசமமான அளவு கரைசலை பயன்படுத்தவும்.
- ✓ மானாவாரியில் மழை எதிர்பார்க்கப்படுவதால் பருத்தி, சோளம் மற்றும் மக்காச்சோளம் விதைகளை விதைப்பு செய்து விதைத்த பயிர்களை மூடி ஆழச்சால் அகலப்பாத்திகள் மற்றும் பகுதிப்பாத்திகள் அமைக்கவும்.
- ✓ மானாவாரியில முதல் மழையில் விதைப்பு செய்து முளைக்கப்பட்ட பயிர்களின் எண்ணிக்கையை கண்காணித்து, மழை எதிர்பார்க்கப்படுவதால் ஊடு விதைப்பு செய்யவும்.

### 4. தெற்கு மண்டலம் -2

வரும் நாட்களில் தெற்கு மண்டலமான திண்டுக்கல், மதுரை, புதுக்கோட்டை, இராமநாதபுரம், சிவகங்கை, தேனி ஆகிய மாவட்டங்களில் வானம் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல் நேர வெப்பநிலை 32°செ முதல் 33°செ

ஆகவும், இரவு நேர வெப்பநிலை 21°செ முதல் 25°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காலை நேர காற்றின் ஈரப்பதம் 65 முதல் 85 சதவீதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்று மணிக்கு 4 கி.மீ முதல் 15 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ வரும் தினங்களில் எதிர்பார்க்கப்படும் இலேசான மழையைப் பயன்படுத்தி வரும் வடகிழக்கு பருவமழை பருவத்தில் மானாவாரியில் பயிர் சாகுபடி செய்வதற்கு ஏதுவாக மானவாரி நிலங்களை உழவு செய்ய லாம்.
- ✓ பின் சம்பா பருவத்தில் நேரடி விதைப்பில் விதைப்பதற்கு முன் விதைகளை சூடோமோனாஸ் என்ற எதிர் உயிரியினை ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் என்ற அளவில் விதை நேர்த்தி செய்து விதைக்கவும். இதனால் விதைகளின் முளைப்புத்திறன் மற்றும் வீரிய தன்மை அதிகரிக்கும். விதைகள் மூலம் பரவக்கூடிய நோய் கிருமிகள் அழிந்து விடும்.
- ✓ மழை எதிர்பார்க்கப்படுவதால் சாகுபடி செய்யப்பட்ட காய்கறி பயிர்கள் மற்றும் பூ பயிர்களுக்கு தகுந்த வடிகால் வசதி செய்து கொடுக்கவும். மழையினால் பூவின் தரம் பாதிக்கப்படுவதால் மழைக்கு முன் பூவை பறித்து விற்பனை செய்யவும்.

## 5. மலைப்பிரதேச மண்டலம்

வரும் நாட்களில் மலைப்பிரதேச மண்டலமான நீலகிரி மாவட்டத்தில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 20°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 11°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காலை மற்றும் மாலை நேர காற்றின் ஈரப்பதம் 80 முதல் 87 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்று மணிக்கு 4 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ தொடர் மழையால் பயிர்களில் காணப்படும் நோயை தடுக்க 0.02 சதவீதம் கார்பெண்டசிம் மருந்தை மண்ணில் வேரை சுற்றி ஊற்றவும்.
- ✓ சூடோமோனாஸ் 0.1 சதவீத கரைசலை இலைப்புள்ளி நோயுடைய காய்கறி பயிர்களில் தெளிப்பதன் மூலம் இந்நோயைக் கட்டுப்படுத்தலாம்.

## 6.வடமேற்கு மண்டலம்

வரும் நாட்களில் வடமேற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் வானம் இலேசான மேகமூட்டத்துடன் இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 30°செ முதல் 33°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 21°செ முதல் 24°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 74 முதல் 86 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகமானது 2 கி.மீ முதல் 8 வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ காற்றின் ஈரப்பதமும் வெப்ப அளவுகளும் கோழி மற்றும் மாட்டுத்தீவனத்தில் பூஞ்சை நச்சு உருவாவதற்கு ஏற்றதாக உள்ளதால், ஈரப்பதத்துடன் உள்ள தீவன மூலப்பொருட்களை சேமிப்பதில் மிகுந்த கவனம் தேவை. பூஞ்சை நச்சு பரிசோதனை செய்த பிறகு பயன்படுத்தவது மிகச்சிறந்தது.
- ✓ தற்போது கிடைக்கும் மழையினைப் பயன்படுத்தி புரட்டாசிப் பட்டத்தில் மானாவரியில் உளுந்து. பாசிப்பயறு, துவரை, தட்டைப்பயறு போன்ற பயறு வகைகளை சாகுபடி செய்யலாம். புதிய இரகங்ளான உளுந்து ,கோ,6 மற்றும் மதுரை,1 பாசிப்பயறு , கோ/8 மற்றும் வம்பன,3 துவரை , கோ,7 மற்றும் வம்பன்,3 தட்டைப்பயறு , கோ,7 போன்ற குறுகிய கால இரகங்களைத் தேர்வு செய்து விதைப்பு செய்தால் அதிக மகசூல் பெறலாம்.

**7. வடகிழக்கு மண்டலம்**

அடுத்து வரும் ஐந்து நாட்களிலும் வடகிழக்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சென்னை, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, திருவள்ளூர், கடலூர், வேலூர், விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 31°செ முதல் 33°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 23°செ முதல் 26°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 72 முதல் 87 சதவிகிதமாகவும், காற்றின் வேகம் 2 கி.மீ முதல் 4 கி.மீ வரையிலும் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ மழைக்காலம் துவங்குவதற்கு முன்பாக மாடுகளுக்கு சப்பை நோய் மற்றும் தொண்டை அடைப்பான் நோய்க்கான தடுப்பூசி அளிக்க வேண்டும்.
- ✓ அதிக ஈரப்பதமும் வெப்பமும் ஒட்டுண்ணிகள் மற்றும் ஈக்களின் பெருக்கத்தை அதிகப்படுத்தும். எனவே உழவர்கள் முறையாக கொட்டைகையை சுத்தம் செய்து கால்நடைகளின் சாணத்தை மூடி எருக்குரியில் சேரிக்க வேண்டும். இவ்வாறு செய்வதால் ஒட்டுண்ணிகளால் நோய் பரவுவதை கட்டுப்படுத்தலாம்.
- ✓ முானாவாரியில் மழை எதிர்பார்க்கப்படுவதால் தயார் செய்யப்பட்ட செங்காட்டில் ஓரிர நாட்களுக்குள் நிலக்கடல விதைப்பு செய்யவும்.
- ✓ ஆடிப்பட்டத்தில் போடப்பட்ட நிலக்கடலை பயிரை மழை ஈரத்தை பயன்படுத்தி அறுவடை செய்து அறுவடை செய்த காயை உலர்த்தவும்.

**8.அதிக மழை பெறும் மண்டலம்**

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிது. பகல்நேர வெப்பநிலை 30°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 24°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 74 முதல் 78 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் மணிக்கு 8 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ மழை இருப்பதால் , காய்க்கும் பருவத்திலுள்ள அன்னாசியில் மழை நீர் தேங்காமல் வடிகால் வசதி செய்யவும்..
- ✓ இரண்டாம் போக நெல்லுக்கு நிலம் தயாரித்து நாற்றுகளை பிடுங்கி நடவு செய்யவும்.
- ✓ காற்றின் வேகம் மணிக்கு 8 கிலோ மீட்டர் அளவில் காணப்படுவதால் நாற்றுகளை காலை 6 முதல் 10 வரைக்கும் மற்றும் மாலை 4 முதல் 6 வரைக்கும் நடவு செய்யலாம்.

**பேராசிரியர் மற்றும் தலைவர்**
**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலை கழகம்**
**வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம்**
**கோவை - 3**